# தமிழ்நாட்டின் எதிர்காலத்தை காப்பவர் யார் என உணர்ந்து தேர்தலுக்கு தயாராவோம்!

## மதுரை – பழங்காநத்தம் வீரவணக்க நாள் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேருரை!

**மதுரை, ஜன. 27-**

**“தமிழ்நாட்டின் எதிர் காலத்தை காப்பவர் யார் என உணர்ந்து தேர்தலுக்கு தயாராவோம்” என மதுரை பழங்காநத்தம் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டத்தில் உரையாற்றிய துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

மதுரை மாவட்டம், பழங்காநத்தம் ரவுண்டானா அருகில், மதுரை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அணி சார்பில் மொழிப் போரில் இன்னுயிர் ஈந்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் 25.01.2025 – சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய சிறப்புரை வருமாறு:-

“சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையிலேதமிழுக்காக உயிர்நீத்ததியாகிகளுக்கான வீர வணக்க நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதில் பெருமை அடைகிறேன்.

நாட்டிலே இன்று இருக்கக் கூடிய அரசியல் சூழலிலே யார் யாரோ எதை எதையோ கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஐஐடி என்றால் உலகம் முழுதும் பெயர் பெற்றிருக்கும் கல்வி நிறுவனம். அதன் இயக்குனராக இருக்கக்கூடியவர் மாட்டு கோமியத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் சூழலில்தான் அரசியலை எதிர்கொண்டிருக்கிறோம்.

இவர்கள் எதையெல்லாமோ கொண்டாடிக் கொண்டிருக்கிற நிலையிலே நாம் நம் மொழிக்காக நம் இனத்துக்காக இந்த இனத்தின் எதிர்காலத்துக்காக அடுத்த தலைமுறைக்காக நம் சுயமரியாதைக்காக தன்னுடைய இன்னுயிரை ஈந்த மாவீரர்களுக்கான மொழிப்போர்த் தியாகிகள் தினத்தை... வீரவணக்க நாளாக அவர்களின் நினைவுகளை, இந்த இனத்தின் பெருமையை மொழியின் பெருமையை பேசிக் கொண்டிருக்கிறோம்.

சில நாட்கள் முன்பால் இரண்டாயிரம் மூன்றாயிரம் ஆண்டுகள் முன்னால் என்று நம் இனப் பெருமையை பேசிக் கொண்டிருந்தோம். இப்போது நமது முதலமைச்சர் தரவுகளோடு கூடிய அந்த ஆய்வு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். ஏற்கனவே நமது முதலமைச்சர் ‘இனிமேல் தமிழ்நாட்டை விட்டுவிட்டு இந்திய வரலாற்றை எழுத முடியாது’ என்பார். ஆனால் இப்போது, ‘தமிழ்நாட்டை விட்டுவிட்டு உலக வரலாற்றையே எழுத முடியாது’ என்ற அளவுக்கு அந்த ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார்.

### கை குழந்தைகளோடு சிறைக்கு சென்ற பெண்கள்!

இப்படிப்பட்ட 5 ஆயிரம் ஆண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள்தான் இங்கே இருக்கக் கூடிய நாம். இப்படிப்பட்ட நம்முடைய மொழியை ஆதிக்கம் செய்துவிட வேண்டும், அழித்துவிட வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு... இந்தி எதிர்ப்பு போராட்டம் என்பது இன்று நேற்று நடந்துகொண்ருப்பதல்ல. 1938 களில் தொடங்கிய போராட்டம் தொடர்ந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் மாணவர் போராட்டமாக, திராவிட இயக்க போராட்டமாக, மக்கள் போராட்டமாக... பெண்கள் கை குழந்தைகளோடு சிறைக்கு போன போராட்டம் இருக்கிறது என்றால் அது இந்தி எதிர்ப்பு போராட்டம்தான்.

73 பெண்கள் கைக் குழந்தைகளோடு போராட்டத்தில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப் படு கிறார்கள். ‘மன்னிப்பு கேட்டுட்டு போறீங்களா?’ என்று நீதிமன்றத்தில் கேட்டபோது அந்த வழக்காடு மன்றத்தையே தங்களது பிரச்சார மேடையாக மாற்றி, ‘நாங்கள் மன்னிப்பு கேட்க மாட்டோம். இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம்’ என்று சொல்லி கை குழந்தைகளோடு பெண்கள் சிறைக்கு சென்ற வரலாறு நமக்கு இருக்கிறது.

இத்தனை போராட்டங்களுக்குப் பிறகு ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசு... நேரடியாக இந்தியை திணித்தால் இங்கே எரிமலை வெடிக்கிறது என்பதை புர்நிதுகொண்டு.,... நாம் இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தால் அந்தப் பக்கம் இந்தியை கொண்டுவருவது என்று ஒவ்வொரு கட்டத்திலும் மொழித் திணிப்பை இன்றுவரை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தித் திணிப்பு என்பது மொழித் திணிப்பு என்பது மட்டுமல்ல... ஒரு மொழி நம் மீது திணிக்கப்படும்போது நம் மொழி மீதான மரியாதை குறைக்கப்படுகிறது. அந்த மொழிதான் அரசாங்கத்தின் மொழி என்று சொல்லும்போது நம் மொழியின் இடம் அங்கே என்ன? ஆட்சியிலே நிர்வாகத்திலே நம் தமிழின் இடம் எது? தமிழுக்கு மரியாதை இல்லை என்றால் தமிழ் பேசக் கூடிய மக்களின் நிலை என்ன? நம் எதிர்காலம், நம் பிள்ளைகளின் எதிர்காலம் மிக பெரிய கேள்விக்குறியாக நிற்கும் என்பதற்காகத்தான் நாம் தொடர்ந்து இந்தித் திணிப்பை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பாக மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மாணவர் அணி அமைப்பாளர் அன்பு என்ற துரை கோபால்சாமி தலைமையில், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னிலையில் சிறப்புரையாற்றி யாற்றினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் குடந்தை ரமேஷ், மார்ஷல் முருகன், தீக்கனல் தியாகு, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி.செந்தில்குமார், கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, எம்.ஜெயராம், கே.தனச்செல்வம், ஒச்சுபாலு, மூவேந்திரன், ராகவன், சின்னம்மாள், முருகவேல், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், எஸ்.வி.சுதன் மற்றும் மாணவர் அணி துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், திரளான கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், நமது தளபதி முதலமைச்சர் அண்ணன் என இப்போது வரை மொழித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தை கை விடாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இனத்தை இந்த மக்களை நமது எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, நமக்கு அரணாக நிற்கக் கூடியது நமது மொழி என்ற எண்ணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.

நாடாளுமன்றத்துக்கு தமிழ்நாட்டில் இருந்து செல்லும் பெரும்பாலான எம்பிகளுக்கு இந்தி தெரியாது, படித்தாலும் புரியாது. ஒருவர் இருவருக்கு புரியும். ஆனால் அவரகளுக்கு படிக்கவும் பேசவும் தெரியாது. இப்படிபப்ட்ட சூழலில் நாம் அமைச்சர்களுக்கு கடிதம் எழுதும்போது ஆங்கிலத்தில் எழுதுகிறோம். ஆனால் அமைச்சர்கள் எங்களுக்கு இந்தியில் பதில் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் எழுதிய இந்தி கடிதம் எனக்கு சத்தியமாக புரியவில்லை என்று நான் தமிழில் கடிதம் எழுதி அனுப்பினேன்.

ஏனென்றால்... அவர்களுக்கு இருக்கக் கூடிய ஆதிக்க மனப்பான்மை. நீ யாராக இருந்தாலும் உனக்கு இந்தி தெரியவில்லை என்றால் உனக்கு பதில் கிடைக்காது, இந்த நாட்டிலே உனக்கு இடம் கிடைக்காது என்ற மனப்பான்மையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அடக்குமுறையுடைய உச்சகட்டம் தான் இன்று தமிழ்நாடு புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்திருக்கிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாக இருக்கிறது, புதிய கல்விக் கொள்கை என்றால் புதிது ஏதும் இல்லை.

நமது கல்விக் கொள்கை என்பது அனைவரும் படிக்க வேண்டும். கல்வி கற்க வேண்டும். ஒரு மலைப்பகுதி கிராமத்தில் ஒரு மாணவனோ ஒரு மாணவியோ இருந்தால் கூட அவர்களுக்காக பள்ளிக் கூடம் இயங்கவேண்டும் என்பது தான் திராவிட மாடல் ஆட்சி. ஆனால் பாஜக எண்ணம் என்ன? அவர்களுடைய தர்மப்படி நாமெல்லாம் படிக்கக் கூடாது.

அதனால் போதிய மாணவர்கள் இல்லையென்றால் அந்த பள்ளிக் கூடங்களை எல்லாம் மூடிவிட்டு, எல்லா மாணவர்களையும் கொண்டுவந்து ஒரே இடத்தில் குவித்து அங்கே பாடம் படிக்க வேண்டும். ரொம்ப தூரம் சென்று படிக்க முடியாதவர்கள் எப்படி பள்ளிக் கூடங்களுக்கு செல்ல முடியும்? 50 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதேபோல சில பேருக்கு மட்டும் கல்வி பலருக்கு கல்வி இல்லை என்ற நிலையை உருவாக்க முயற்சிக்கிறார்கள். இதில்தான் விஸ்வகர்மா திட்டமும் வருகிறது.

அதேபோல புதிய கல்விக் கொள்கையை ஏற்காத மாநிலங்களில், கல்லூரிகளில் பெறும் பட்டத்தை நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம் என்கிறார்கள். நான் கேட்கிறேன்... நீ யார் எங்களை அங்கீகரிப்பதற்கு?

உயர் கல்வியில் 50% தொடுவதற்கு இன்னும் 30 வருடங்கள் முயற்சி செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாய். அதெல்லாம் கடந்து வந்துவிட்ட மாநிலம் தமிழ்நாடு.

தலைவர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் எல்லா ஊரிலும் கல்லூரி இருக்க வேண்டும் என்று அரசுக் கல்லூரிகளை உருவாக்கிக் காட்டினார். நாம் அதை இப்போது தாண்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நீ புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து, இதை ஏற்றால்தான் பட்டத்தை அங்கீகரிப்போம் என்று சொல்கிறாய்.

சர்வசிக்ஷா அபியான் என்ற திட்டத்தில் பள்ளிகளுக்கு நிதி தர வேண்டும். நம்முடைய தமிழக அரசுக்கு அந்த திட்டத்தின் வழியாக கிடைக்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். காரணம், புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தான். ஆனால் நம்முடைய முதலமைச்சர், ‘நீ என்ன வேணாலும் பண்ணு... எவ்வளவு காசை வேணும்னால் நீ நிறுத்தி வை. நாங்க இந்தி படிக்க மாட்டோம். நீ ஆனதைச் செய்’ என்று பிரகடனப்படுத்திய தலைவர் நமது தளபதி.

### சிறுபான்மை மக்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலம்!

பல மாநிலங்கள் அந்த நிதியுதவி இல்லாமல் தவித்து புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறோம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஏன் நம் மீது இன்னொரு மொழியைத் திணிக்க வேண்டும்? ஒரு மொழியைத் திணிப்பதன் மூலம் அவர்களின் பண்பாடு, அவர்களின் வாழ்க்கை முறை, அவர்களின் நம்பிக்கையை நம் மீது திணிக்க முடியும்.

இங்கே இருப்பவர்களுக்கு பல்வேறு மதங்கள், பல்வேறு நம்பிக்கைகள் இருக்கிறது. ஆனால் நாம் அனைவரும் ஒற்றுமையோடு மனிதர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சிறுபான்மை மக்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலமாக இருக்கிறது தமிழ்நாடு.

வக்ஃப் போர்டு நிலங்களை பிடுங்க வேண்டும் என்பதற்காக ஒரு மசோதாவை கொண்டு வந்து அந்த மசோதாவின் வழியாக நிலத்தைக் கைப்பற்றி, அதானி அம்பானிக்கு கொடுப்பதற்காக திட்டமிட்டுகிறார்கள். அப்படிப் பட்ட ஷரத்துகளை வைத்து வக்ஃப் மசோதாவைக் கொண்டுவந்தார்கள்., அதை எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு அனுப்பினார்கள். இதுவரை கேள்விப்பட்டிராத வகையில் ஜேபிசியில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் சஸ்பெண்ட் செய்யும் அளவுக்கு எதேச்சதிகாரமாக நடந்துகொள்கிறார்கள்.

ஒரே நாடு ஒரே மொழி, ஒரே நாடு ஒரே உணவு, ஒரே நாடு ஒரே மதம் என்ற வகையில் இப்போது ஒரே நாடு ஒரே தேர்தலை கொண்டுவருகிறார்கள். ஏன்? இப்போதுதான் அமெரிக்காவில் அவரது நண்பர் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அதேபோல இங்கேயும் அதிபர் தேர்தல் முறையைக் கொண்டு வர வேண்டும். கொஞ்ச கொஞ்சமாக இங்கே ஜனநாயகத்தை முற்றிலுமாக அகற்றி மாநில ஆட்சிகளை அகற்ற ஒரே நாடு ஒரே தேர்தல் என்று பா.ஜ.க. துடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தேர்தல் ஒரே நாளில் நடத்தி விடலாம். ஏனென்றால் திராவிட இயக்கத்தின் வழியாக வந்திருக்கும் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள மக்கள். அதனால் இங்கே ஒரே நாளில் தேர்தல் நடத்திவிட முடியும். ஆனால் மற்ற மாநிலங்களில் இது வரை ஒரே நாளில் தேர்தல் நடத்தியிருக்கிறார்களா? உத்திரப்பிரதேச மாநிலத்தில் இது வரை ஒரே நாளில் தேர்தல் நடத்தியிருக்கிறார்களா? ஒரு மாநிலத்தில் கூட ஒரே நாளில் தேர்தல் நடத்த முடியவில்லை. அதற்கான கட்டமைப்பு இல்லை. பின் எப்படி ஒரு நாடு முழுதும் ஒரே தேர்தலை நடத்துவீர்கள்? இப்படி ஜனநாயகத்தை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும்என்றுநினைக்கக்கூடியவர்கள்தான் பா.ஜ.க.வினர்.

அவர்களுக்கு காலம் காலமாக துணை போய்விட்டு இப்போது தேர்தலுக்கு முன்னால், எங்களுக்கும் அவர்களுக்கும் ஒட்டும் இல்லை உறவும் என்று சொல்லக் கூடிய அ.தி.மு.க.

ஒன்றிய ஆட்சி அரிட்டாபட்டியில் டங்க்ஸ்டன் திட்டத்தை கொண்டுவந்தது. அதற்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு தெரிவித்துவிட்டு இங்கே எதிர்க்கிறது அதிமுக. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

திடீரென உணர்ச்சிவசப்பட்டு சாட்டையால் தன்னைத் தானே அடித்துக் கொள்ளக் கூடிய அண்ணாமலை அவர்கள் இருக்கிறார். இதற்கும் அடித்துக் கொண்டிருப்பார் என்று நினைத்தேன் ஆனால் இல்லை. டங்ஸ்டன் சுரங்கத்தைக் கொண்டுவந்ததே அவர்கள் ஆட்சி. அதை எதிர்த்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தது நமது தி.மு.க. ஆட்சி. நான் முதலமைச்சராக இருக்கும் வரை டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் வராது என்று அறிவித்தவர் நமது முதல்வர், போராடியவர்கள் நம் மக்கள்.

ஆனால் இவர்கள் அறிவித்த திட்டத்தை இவர்களே திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டு ஏதோ இவர்களே வேண்டாம் என்று சொன்னதுபோல பாவனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து எதிராக செயல்படும் ஒன்றிய அரசு... சிஏஏவாக இருக்கட்டும், டங்ஸ்டன் சுரங்கமாக இருக்கட்டும் அவர்களுக்கு அடிபணிந்து ஆதரவாக செயல்பட்டுவிட்டு துணை போய்விட்டு தலையாட்டிவிட்டு இன்று ஏதோ நியாயவான் போல இபிஎஸ் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஒரு முறை ஜெயலலிதா அவர்கள் மூத்த பாஜக தலைவர்களை பார்த்து செலக்டிவ் அமினினிசியா என்று சொன்னார். ஒருவேளை இவருக்கும் அதுபோன்ற ஒரு நிலை வந்து விட்டதா என்று தெரியவில்லை.

நமக்கெல்லாம் சுயமரியாதையை கற்றுத் தந்த பெரியாரை, தன் வாழ் நாளெல்லாம் நம் தமிழ் மக்களின் உரிமைக்காக ஒடுக்கப்பட்ட மக்களின் விதிகளை உடைத்து தகர்த்தெறிந்த பெரியாரை, ஆண்களுக்கு நிகராக எழுந்து நில் என்று பெண்ணுரிமை பேசிய பெரியாரை இன்று சிலர் அவமதிக்கிறார்கள். இந்த விவகாரத்தில் அ.தி.மு.க.வும், இ.பி.எஸ்.சும் எங்கே போனார்கள்? அதை எதிர்த்து ஒரு வார்த்தை பேசினாரா? பெரியாரை அவமதித்த குரலுக்கு யார் துணையாக நின்றது?

இங்கே இருக்கும் பலருக்கும் கடவுள் நம்பிக்கை இருக்கலாம். பலருடைய முகத்தில் திருநீறு பார்க்கிறேன். ஆனாலும் யாரும் இங்கே பெரியாரை விட்டுவிட்டு அமர்ந்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. இந்த மேடையிலே இத்தனை பேர் படித்தவர்களாக பட்டம் பெற்றவர்களாக, வெள்ளை வேட்டி வெள்ளை சட்டை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம் என்றால் அதற்கு காரணம் பெரியார் தான்.

இந்த அடிப்படை உணர்வு கூட இல்லாதவர்கள், இந்த நாட்டிலே அரசியல் செய்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன்... நீங்கள் என்ன கனவு கண்டாலும், எத்தனை சாட்டையடி அடித்துக் கொண்டாலும், நாற்காலிக்காக எத்தனை முறை உருண்டாலும் மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள்.,

நமது முதல்வர் பதவியேற்றுக் கொண்ட போதே... எனது ஆட்சி வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துதான் என்று சொன்னார். இன்று இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இருப்பது தமிழ்நாடு. ஒன்றிய அரசை எதிர்த்துக் கொண்டு எப்படி இவ்வளவு சாதனையை செய்கிறீர்கள் என்று நமது மாநிலத்தை பற்றி வெளியே பெருமையாக பேசுகிறார்கள்.

ஜி.டி.பி. தேசிய அளவை விட தமிழ்நாட்டில் தான் அதிகமாக வளர்ந்திருக்கிறது. பெண்கள் அதிகமாக வேலைக்கு போவது, தொழில் முனைவோராக இருப்பது தேசிய சராசரியை விட தமிழ்நாட்டில்தான் அதிகம். அதுவும் நமது முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு.

கல்வியில் நாம் இரண்டாம் இடத்தில் இருக்கிறோம். பெண்களின் கல்வி எந்த நிலையிலும் தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக புதுமைப் பெண் திட்டத்தை உருவாக்கி. தந்தையாக தனயனாக நின்று மாதம் ஆயிரம் ரூபாய் தரும் ஆட்சி தி.மு.க. ஆட்சி.

### லட்சக்கணக்கான பெண்கள் வாழ்வில் விளக்கேற்றும் ஆட்சி!

திட்ட கமிஷன் மேற்கொண்டுள்ள ஆய்வுகளின்படி பல பெண்கள் தங்கள் தடைபட்ட கல்லூரிப் படிப்பை தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள்., தூத்துக்குடியில் நம்முடைய தளபதி முதல்வர் அண்ணன் முன்னிலையில் பேசிய ஒரு பெண், ‘எனக்கு திருமணமாகிவிட்டது. என் கல்லூரி கல்வி தடைபட்டது. இப்போது நீங்கள் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தவுடன் எனக்கு குழந்தை இருந்தபோதும் நர்சிங் காலேஜ் சேர்ந்திருக்கிறேன். நன்றி அண்ணா’ என்று அந்த மேடையிலே கண்ணீரோடு சொன்னார். இப்படி லட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்திருக்கிறது நமது ஆட்சி.

மதுரையை எடுத்துக் கொண்டால் உலகத் தரம் வாய்ந்த கலைஞர் நூலகத்தைக் கட்டியிருக்கிறோம். பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் டைடல் பார்க்கை மதுரைக்கு அறிவித்திருக்கிறார் தளபதி. அவர் அறிவித்தால் நிச்சயம் செய்து தருவார். இப்படித் தான் தூத்துக்குடிக்கு டைடல் பார்க் என்று அறிவித்தார். சொன்னபடியே செய்து தந்தவர் அண்ணன் தளபதி. அங்கே டைடல் பார்க் திறக்கும்போதே ஃபுல் ஆகிவிட்டது.

ஒவ்வொரு நாளும் மக்களுக்கான திட்டங்கள் செய்துகொண்டு, அதே நேரம் நமது மொழியை நமது இனத்தை நமது சுயமரியாதையை நமது உரிமைகளை பாதுகாத்துக் கொண்டிருக்கும் பணியையும் செய்துவருகிறார் முதலமைச்சர் நமது தளபதி.

மொழிப்போர்த் தியாகிகள் கூட்டம் என்பது கடந்த காலத்தை மட்டுமே நினைவுபடுத்தும் கூட்டம் அல்ல. எதிர்காலத்துக்காகவும்தான் இந்த கூட்டம். நமது கடமை என்ன என்பதை ஒவ்வொரு நாளும் நமக்கு ஆளுநர் ஆர்.என். ரவி நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார்.

5 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுத் தொன்மை கொண்ட இந்த மொழியை இந்த இனத்தை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதை இந்த மொழிப்போர் தியாகிகள் தினத்தில் நம் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.’

வரக் கூடிய தேர்தல் என்பது நமது இனத்தை மொழியை நம்முடைய உரிமைகளை அடையாளங்களை காக்க கூடிய தேர்தல். அதை காக்க கூடியவர்கள் யார் என்பதை உணர்ந்துகொண்டு தேர்தலுக்காக பணியாற்ற வேண்டும் புறப்படுங்கள். நன்றி”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

உடன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கோ.தளபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குழந்தை வேலு, மாநகராட்சி மேயர் இந்திராணி, மாநில மாணவரணி துணைச் செயலாளர் அதலை செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜெயராம், இளமகிழன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அன்பு (எ) துரை கோபால்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.